**சுருக்கம்**

சிறுபான்மையினர் நலன் – கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் – அரசின் இணை மானியத்தை 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் உச்சபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை நிதி ஒப்பளிப்பு – 22 மாவட்டங்களைச் சார்ந்த கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு அரசின் இணை மானியமாக ரூ.1,62,57,042/–ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி1) துறை**

அரசாணை (நிலை) எண்.55

நாள் 18.07.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆடி 2

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.70, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 1.11.2018.
2. அரசாணை (நிலை) எண்.34, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 6.6.2019.
3. அரசாணை (நிலை) எண்.05, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 29.01.2021.
4. அரசாணை (நிலை) எண்.20, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள் 07.03.2022.
5. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். அ4/1305/ 2022, நாள் 16.06.2022.

*******

**ஆணை :–**

மேலே முதலாவதாக, இரண்டாவதாக, மூன்றாவதாக மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில், தமிழ்நாட்டில் பின்தங்கிய நிலையிலுள்ள கிறித்தவ சமுதாயத்தைச் சார்ந்த, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான கிறித்தவ மகளிரின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கியும் அச்சங்கங்களுக்கு ஆரம்ப நிதி ஆதாரமாக 38 மாவட்டங்களுக்கு அரசின் விதைத் தொகையாக சங்கம் ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.38.00 இலட்சம் (ரூபாய் முப்பத்தெட்டு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் கீழ்க்காணும் 22 மாவட்டங்களில் 2021–22– ஆம் ஆண்டின் இரண்டாம் பருவத்தில் (01.10.2021 முதல் 31.03.2022 வரை) கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் வசூல் செய்யப்பட்ட மொத்த நன்கொடைத் தொகை ரூ.81,28,521/–க்கு (ரூபாய் எண்பத்தொரு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து ஐநூற்று இருபத்தொன்று மட்டும்) அரசின் இணைமானியத்தினை 1 : 2 என்ற விகிதாசாரத்தில் உச்சபட்சத் தொகைக்கு உட்பட்டு ரூ.1,62,57,042/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நாற்பத்து இரண்டு மட்டும்) ஒப்பளித்து அரசாணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். 22 மாவட்டங்களில் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் வசூலிக்கப்பட்ட நன்கொடைத் தொகைகளின் விவரம் பின்வருமாறு:–

| வ.எண் | மாவட்டம் | வசூல் செய்த நன்கொடைத் தொகை (01.10.2021 முதல் 31.03.2022 வரை) ரூ. | அரசின் இணை மானியம் கோரி பரிந்துரை செய்யும் தொகை (1 : 2 என்ற விகிதாச்சாரத்தின்படி) ரூ. |
|---|---|---|---|
| 1. | சேலம் | 2,42,300/– | 4,84,600/– |
| 2. | ஈரோடு | 18,220/– | 36,440/– |
| 3. | திருவண்ணாமலை | 10,00,000/– | 20,00,000/– |
| 4. | திருச்சிராப்பள்ளி | 2,00,000/– | 4,00,000/– |
| 5. | திண்டுக்கல் | 10,00,000/– | 20,00,000/– |
| 6. | விழுப்புரம் | 6,60,001/– | 13,20,002/– |
| 7. | இராமநாதபுரம் | 10,00,000/– | 20,00,000/– |
| 8. | காஞ்சிபுரம் | 2,25,000/– | 4,50,000/– |
| 9. | நாமக்கல் | 1,00,000/– | 2,00,000/– |
| 10. | வேலூர் | 35,000/– | 70,000/– |
| 11. | சிவகங்கை | 9,50,000/– | 19,00,000/– |
| 12. | கிருஷ்ணகிரி | 9,05,000/– | 18,10,000/– |
| 13. | தருமபுரி | 20,000/– | 40,000/– |
| 14. | நீலகிரி | 3,15,000/– | 6,30,000/– |
| 15. | கரூர் | 1,53,000/– | 3,06,000/– |
| 16. | புதுக்கோட்டை | 1,50,000/– | 3,00,000/– |
| 17. | செங்கல்பட்டு | 1,00,000/– | 2,00,000/– |
| 18. | தூத்துக்குடி | 40,000/– | 80,000/– |
| 19. | சென்னை | 3,00,000/– | 6,00,000/– |
| 20. | திருநெல்வேலி | 1,00,000/– | 2,00,000/– |
| 21. | திருவள்ளூர் | 5,00,000/– | 10,00,000/– |
| 22. | கோயம்புத்தூர் | 1,15,000/– | 2,30,000/– |
| | மொத்தம் | 81,28,521/– | 1,62,57,042/– |
| | (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நாற்பத்து இரண்டு மட்டும்) | | |

3. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, மேலே பத்தி 2-இல் குறிப்பிட்டுள்ள 22 மாவட்டங்களைச் சேர்ந்த கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் 01.10.2021 முதல் 31.03.2022 வரை வசூல் செய்யப்பட்ட மொத்த நன்கொடைத் தொகை ரூ.81,28,521/-க்கு (ரூபாய் எண்பத்தொரு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து ஐநூற்று இருபத்தொன்று மட்டும்) அரசின் இணைமானியத்தினை 1 : 2 என்ற விகிதாசாரத்தில் உச்சபட்சத் தொகை ரூ.20.00 இலட்சத்துக்கு உட்பட்டு ரூ.1,62,57,042/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நாற்பத்து இரண்டு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் - 200 - ஏனைய திட்டப் பணிகள் - மாநிலச் செலவினங்கள்- MA கிறித்துவ மகளிர் சங்கத்திற்கு நிதியுதவி - 309 உதவித்தொகை - 01 - நடப்புச் செலவுக்கான உதவித்தொகை "

(IFHRMS: த.தொ.கு 2235 60 200 MA 30901)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று செலவினத்தை மேற்கொள்ள சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலும்,

(i) 2018-19ஆம் ஆண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டு வரை மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கிறித்தவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் திரட்டப்பட்ட தொகைக்கு அரசால் விடுவிக்கப்பட்ட இணை மானியத்தினை செலவிடப்பட்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை அனுப்புமாறு அறிவுறுத்துமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்,

(ii) கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் திரட்டிய நன்கொடைத் தொகையின் உண்மை தன்மை அந்தந்த மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் சரிபார்க்கப்படுவதை உறுதி செய்யுமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்

(iii) இனிவரும் காலங்களில், மேற்படி சங்கங்களின் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நிதி விடுவிக்கப்படும் என சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது

7. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.36396/நிதி (பி,மிபி(ம)சிந)/2022, நாள் 15.07.2022–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்
சிறுபான்மையினர் நலன்,
சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம், சென்னை– 5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்.
மாநில கணக்காயர், சென்னை–18
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
<u>நகல்</u>
நிதி(பி,மிபி(ம)சிந)துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச்செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/7/22
பிரிவு அலுவலர்